**09.04.2010 அன்று 11.00 மணியளவில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டத்தின் குறிப்புகள் (Minutes) – திட்டம் தி/ள். இந்த் பாரத் தெர்மல் பவர் லிமிடெட் நிறுவ உள்ள 3 x 150 மெகாவாட் திறன் உள்ள அனல் மின் நிலையம், சுவாமிநத்தம் மற்றும் ஓட்டப்பிடாரம் கிராமங்கள், ஓட்டப்பிடாரம் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்.**

கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் குறித்த விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுப்புற சூழல் நலப் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி கூட்டத்திற்கு வந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை வரவேற்று பொதுமக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டத்தின் அவசியத்தை விபரமாக எடுத்துரைத்தார். மேலும் சுற்றுச்சூழல் தாக்க மதீப்பீடுல் உள்ள பல்வேறு குறிப்புகளையும் எடுத்துரைத்து புதிதாக தொடங்க உள்ள அனல் மின் நிலைய திட்டம் பற்றிய முழு விவரங்களை பொதுமக்களுக்கு எடுத்துரைக்க திட்ட அமைப்பாளர்களை கேட்டுக்கொண்டார்.

திட்ட அமைப்பாளர்களின் பிரதிநிதி புதிதாக அமைய உள்ள அனல் மின் நிலையத்தின் தொழில் நுட்பம், செயல்பாடுகள், எரிபொருள் நிறுவ உள்ள காற்று மாசு தடுப்பு சாதனங்களின் செயல்பாடுகள், அனல் மின் நிலையத்திற்கு தேவையான நீர், நிறுவப்பட உள்ள சுத்திகரிப்பு நிலையம் பற்றிய விளக்கங்களை மின் தகடு (Slide) மூலம் விளக்கி கூறினார்.

இத்திட்டம் சுழற்சி முறையிலான கொதிகலன் தொழில் நுட்பத்ததை கொண்டது என்றும் இத்திட்டத்தில் 70 சதவீதம் உள்நாட்டு நிலக்கரியையும் 30 சதவீதம் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியையும் உபயோகப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தனர். மேலும் இத்திட்டத்தில் காற்று குளிரூட்டிகள் நிறுவப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். இத்திட்டத்திற்கு தேவையான கொதிகலன் நீர், அன்றாட தேவைகளுக்கான நீர் மற்றும் பசுமைப் போர்வைக்கு தேவையான நீர் ஆகியவை தனியார் கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மூலமாக (Desalination Plant) மூலம் பெறப்பட இருப்பதாகவும் தெரிவித்தார். இத்திட்டத்தில் காற்று மாசு ஏற்படுவதை தடுக்க மூன்று தனித் தனி காற்று தூசி வடிப்பான்கள் (Electro static preceptor) மற்றும் இரண்டு 130 மீ உயரமுள்ள புகைபோக்கிகள் அமைய இருப்பதாகவும் தெரிவித்தார்.

இத்திட்டம் சுமார் 225 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய உள்ளது என்றும் அதில் 65 ஏக்கர் பசுமை போர்வைக்காக ஒதுக்கப்பட உள்ளது என்றும் சுமார் 30 ஏக்கர் நிலம் சாம்பல் கழிவுகளுக்காக ஒதுக்கப்பட உள்ளது என்றும் தெரிவித்தனர். இத்திட்டத்திற்கு தேவையான நிலக்கரி ரயில் மூலமாகவோ அல்லது சாலை வழியாகவோ தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து கொண்டு செல்லப்படும் என்றும் நிலக்கரி வைக்கப்பட உள்ள சேமிப்பு கிடங்கில் துகள்கள் பரவா வண்ணம் காற்று தடுப்பான் மற்றும் நீர் தெளிப்பான் நிறுவ உள்ளதாகவும் தெரிவித்தார். நிலக்கரி எடுத்துச் செல்ல உள்ள ரப்பர் கடத்திகள் (Conveyor) முழுவதும் மூடிய நிலையில் எடுத்து செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அனல் மின் நிலையம் ஆரம்பிக்கும் முன்பு காற்று மாசு அளவை தொடர்ந்து கண்காணிக்க உபகரணங்கள் நிறுவ உள்ளதாக தெரிவித்தார். மேலும் இத்திட்டத்திற்கு தேவையான வேலை ஆட்கள் அப்பகுதியில் இருந்து எடுக்க இருப்பதாக உறுதி அளித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர், தூத்துக்குடி மாவட்டம் பொதுமக்கள் இத்திட்டம் பற்றிய ஐயப்பாடுகளையும் கேள்விகளையும் இத்திட்டம் பற்றிய கருத்துக்களை கூற கேட்டுக்கொண்டார்.

**1. திரு. தேவேந்திரன், கவர்னகிரி**

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ள இடத்தில் இந்த பொதுமக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும் முறையான விளம்பரங்கள் நாளிதழ்களில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும் இத்திட்டத்தை ஆரம்பிக்க உள்ளவர்கள் ஏற்கனவே இம்மாவட்டத்தில் இரண்டு அனல் மின் நிலையங்களை இயக்கி வருவதாகவும் அதில் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். இத்திட்டத்திற்கான நீர் தற்போது ஓட்டப்பிடாரம் பகுதியல் இருந்து எடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

இத்திட்ட அமைப்பாளர்கள் இத்திட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளதாகவும், இது திட்டம் அமைய உள்ள இடத்திற்கு அருகில் இருப்பதாகவும் இது குறித்து தேவையான பத்திரிக்கை செய்திகள், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையில் கூறியபடி வெளியிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். தற்போது இத்திட்ட அமைப்பாளர்களால் இயங்கி வரும் இரு அனல் மின் நிலையங்களிலும் 90 சதவீதம் உள்ளூர் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும் இத்திட்டத்திற்கு தேவையான நீர் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு தேவையான நீர் தனியார் கடல் நீரை

குடிநீராக்கும் நிலையங்கள் மூலமாக (Desalination Plant) மூலம் பெறப்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

**2. திருமதி. அசுந்தா, சியர்ஸ் அமைப்பு, எப்போதும்வென்றான்.**

இந்த பொதுக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டம் திட்டம் துவங்குவதற்கு முன்பாகவே நடத்தப்பட வேண்டும் என்றும் அரசு இத்திட்ட அமைப்பாளர்களை முதலில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தை செயல்படுத்திப பின்பு இத்திட்டத்தை செயல்படுத்த அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். இத்திட்டத்தினால் அப்பகுதியிலுள்ள மக்கள் அடையும் பயன்களைவிட நிலத்தின் இழப்பு அதிகமாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

இதற்கு திட்ட அமைப்பாளர்கள் அரசாங்கத்திலிருந்து இத்திட்டத்திற்கு தேவையான நீரை பெறுவதற்கு கோரிக்கை வைத்துள்ளதாகவும், அது அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும் ஆனால் இத்திட்டத்திற்கு தேவையான நீரை தனியார் கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மூலமாக (Desalination Plant) மூலம் பெறப்பட இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தால் இப்பகுதி மக்களின் சமுதாய மேம்பாடு முன்னேறும் என்றும் தெரிவித்தார்.

**3. திரு. ஜிந்தா, செயலாளர், பொதுமக்கள் குறை தீர்க்கும் அமைப்பு,நாசரேத்**

இவர் தற்போது இயங்கி வரும் அனல் மின் நிலையங்களுக்கு தேவையான நீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து பெறப்படுகிறதா? அல்லது பூமிக்கடியில் இருந்து எடுக்கப்படுகிறதா? என்றும், கட்டுமான பணிகளுக்கு தேவையான நீர் எவ்வாறு பெறப்படுகிறது என்றும் கேள்விகள் எழுப்பினார்.

இத்திட்டத்திற்கு தேவையான பணிகளுக்கு உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா? இத்திட்டத்திற்கான திட்ட விளக்கவுரையில் நிலக்கரி ரயில் மூலமாக அல்லது சாலை வழியாகவோ கொண்டு வரப்படும் என்றும் ஆனால் இத்திட்டம் அமைய உள்ள பகுதியில் ரயில் தடங்கள் இல்லை என்றும், எவ்வாறு அதிக அளவிலான நிலக்கரி கொண்டு வரப்படும் என்றும் வினா எழுப்பினார். இதனால் வரும் காற்று தூசுகள் எந்த அளவிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்றும் வினா எழுப்பினார்.

இதற்கு திட்ட அமைப்பாளர்கள், காற்று வடிப்பான்கள் 50 மைக்ரோ கிராம் / மீட்டர் கியூப் அளவினர் தூசிகளை வடிகட்ட வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் நிலக்கரி சுண்ணாம்பு கற்களுடன் கலந்து எரிப்பதால் சல்பர்—டை ஆக்ஸைடு அதிகளவில் வெளியேற வாய்ப்பில்லை என்றும் தெரிவித்தனர். இத்திட்டத்திற்கு தேவையான நீரை தனியார் கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மூலமாக (Desalination Plant) மூலம் பெறப்பட இருப்பதாகவும் தெரிவித்தனர்.

**4. திரு. கொம்பு மகராஜா, ஓட்டப்பிடாரம் பெரியகுளம் விவசாய சங்கம், சாமிநத்தம்**

இவர் இத்திட்டம் அமையவுள்ள பகுதிகள் வறட்சியாகவும், வானம் பார்த்த பூமியாகவும் இருப்பதாகவும் தெரிவித்தார். விவசாயம் குறைந்து விடுவதாகவும் அதனால் இத்திட்டத்தை வரவேற்பதாகவும் மேலும் இத்திட்டம் அமைய உள்ள பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

**5. திரு. செந்தூர்பாண்டி, எப்போதும்வென்றான்**

இவர் தற்பொழுது இயக்கத்தில் உள்ள அனல் மின் நிலையத்தின் அருகில் வசிப்பதாகவும் இப்பகுதி வறட்சியானதாகவும் இப்பகுதியில் சராசரி மழையின் அளவைவிட குறைவாக மழை பெய்வதாகவும் தெரிவித்தார். தற்பொழுது இரண்டாயிரம் பேர் நேரிடையாகவும் மறைமுகமாகவும் பொருளாதார ரீதியில் பயன் அடைந்து வருவதாக தெரிவித்தார். இதுபோன்ற வாய்ப்புகள் புதிதாக அமைக்கப்படும் தொழிற்சாலைகளினால் கிடைப்பதால் இத்தொழிற்சாலையை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

**6. திரு. ராமஜெயம், தனியார் தொழிலாளி, தூத்துக்குடி**

இவர் இப்பகுதி மக்களுக்கு போதிய வேலைவாய்ப்பு இல்லாமலும், மின் வெட்டினால் அவதிப்படுவதாகவும் தெரிவித்தார். இத்தகைய பிரச்சினைகள் புதிதாக அமைய உள்ள அனல் மின் நிலையத்தால் தீர்வு ஏற்படும் என்றும் ஆதலால் இந்த திட்டத்தை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

**7. திரு. நடராஜன்,சங்கரப்பேரி**

இவர் இத்திட்டத்தை வரவேற்பதாகவும் ஏனென்றால் இத்திட்டத்தினால் இப்பகுதி மக்களின் சமூக மற்றும் பொருளதாரம் மேம்படும் என்று தெரிவித்தார்

**8. திரு. சத்யா லட்சுமணன், நுகர்வோர் பேரவை, தூத்துக்குடி**

இவர் இத்திட்டத்தினால் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என்றும் அதே சமயத்தில் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படவேண்டும் என்று தெரிவித்தார்.

**9. திரு. போஸ், சாமிநத்தம் கிராமம்**

இவர் இத்திட்டத்தினால் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என்றும் அதே சமயத்தில் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

**10. திரு. கனகராஜ், புதியம்புத்தூர்**

இப்பகுதி நிலங்களை இதற்கு முன்னால் வாங்கியவர்கள் விவசாய பண்ணைகள் ஆரம்பிக்க இருப்பதாக வாங்கினார்கள். ஆனால் தற்போது அனல் மின் நிலையத்திற்கு விற்று விட்டார்கள். நிலத்தை விற்றவர்கள் தற்போது வேலைவாய்ப்பு இல்லாமல் உள்ளதால் 225 ஏக்கர் நிலத்தை இத்திட்டத்திற்காக விற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கூறினார்.

இதற்கு திட்ட அமைப்பாளர்கள், உள்ளூர் மக்களுக்கு அவர்களுடைய கல்வி தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

**11. திரு. அலங்கார பரதர், தலைவர், மீனவ மக்கள் கட்சி, தூத்துக்குடி**

இவர் இத்திட்ட அமைப்பாளர்கள் பொதுமக்களுடைய வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என்றும் துகள்களை கட்டுப்படுத்த நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இத்திட்டத்திற்கு தேவையான நீர் கடலில் இருந்து எடுக்கவோ அல்லது கழிவு நீர் கடலுக்குள் விடவோ கூடாது என்றும் தெரிவித்தார். தூத்துக்குடியில் வாழும் மக்கள் ஏற்கனவே அதிக வெப்பத்தால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் ஆகவே அரசு இம்மாவட்டத்திற்கு மின் விநியோகத்தில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

**12. திரு. சின்னத்துரை, மாவட்ட பஞ்சாயத்து தலைவர், தூத்துக்குடி**

இவர் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என்றும் ஏற்கனவே துறைமுகத்தின் பகுதியிலுள்ள சாலைகள் போக்குவரத்து நெரிசலால் பாதிக்கப்பட்டு உள்ளது என்றும் இந்நிலையில் இத்திட்டத்திற்கு தேவையான நிலக்கரி எவ்வாறு துறைமுகத்திலிருந்து கொண்டு வரப்படும் என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு திட்ட அமைப்பாளர்கள் இத்திட்டத்திற்கு தேவையான நிலக்கரி ரயில் மூலம் கொண்டு வர முயற்சிகள் எடுப்பதாகவும், முடியாத பட்சத்தில் கிராம சாலைகள் அரசு மற்றும் பொது திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்படும் என்றும் தெரிவித்தனர்.

முடிவில் மாவட்ட வருவாய் அலுவலர், தூத்துக்குடி இந்த பொதுமக்கள் கருத்து கேட்டுணர்வு கூட்டத்திற்கு வருகை தந்து தங்களுடைய கருத்துக்களை / ஆலோசனைகளை வழங்கியதற்கு நன்றி கூறி கருத்து கேட்டுணர்வு கூட்டம் முடிந்ததாக அறிவித்தார்.

மாவட்ட சுற்றுப்புற சூழல் நலப் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
தூத்துக்குடி.

**Minutes of the Public Hearing Meeting held on 09.04.2010 at 11.00 A.M. at Office of the Collectorate, Palayamkottai Road, Korampallam, Thoothukudi District for the proposed M/s. Ind-Bharath Power Limited (formerly Ind-Bharath Power (Karwar) Ltd., for (3 x 150 MW) blended coal based Thermal Power Plant at Swaminatham & Ottapidaram villages in Ottapidaram Taluk of Thoothukudi District.**

**The list of participants is enclosed in the Annexure**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thoothukudi District welcomed the public and explained about the need to conduct the public hearing. He also explained about the various provisions of EIA and requested the project proponent to explain in details about the project.

The project proponent welcomed the gathering and explained in details about the proposed project. The project is based on circulating fluidized bed combustion boiler technology using 70% indigenous coal with 30% of imported coal. The project will use Air cool condenser system for main condensate cooling instead of conventional water cooling system. The water required for boiler feed and its domestic needs including green belt development will be met from the proposed (Third party) desalination plant. The project will have three separate ESP's followed by chimney of 130 M (twin flue) and another 130 M.

The total area envisaged for the project is 225 acres. Out of the 225 acres about 65 acres is earmarked for green belt development. About 30 acres is earmarked for ash dyke. The coal is proposed to be transported either by rail to pre-plant site or through road transport system from the Tuticorin Port. The coal storage yard will be provided with wind shield, water sprinklers system and use of closed coal conveyors.

The project proponent also explained about the continuous air quality monitoring system that will be implemented during operation. The proponent also committed to provide maximum employment opportunity to the local people.

The District Revenue Officer, Thoothukudi District has requested the public to express their opinion about the proposed project.

**Public 1**

**Thiru. Deivendran, Governagiri.**

He said that the public hearing should be conduced at the project site and apprehend that proper advertisement must be given in the news paper. He also said that, the proponent is already operating 2 power plants and they have not provided enough employment opportunities to the local people. He also informed that the project proponent is at present drawing ground water from Ottapidaram area.

It was replied by the proponent that, the Collectorate is within 5km radius of the proposed project site. Which is close proximity to the site. Further enough publicity was given as per norms stipulated in EIA notification. More than 90% of employees in the existing operating plants are from the local areas. It was informed that water will be purchased from the private desalination plants for all the activities including the construction base also.

**Public- 2**

**Ms. Assunta, Center for Human Empowerment through Education Related Services, (CHEERS) Eppothumvendran.**

She suggested that public hearing should be conducted before starting the feasibility survey of the project. Government should instruct the project propend to put up desalination plant first and the commence their activities. The loss of land for this project is very high compared to the benefits enjoyed by the local mass.

It was replied that, requisition was made to the government to provide water supply facility and is still under process but the management has once for all decided to opt for outright purchase from the desalination plant. Moreover the power generation will help to improve social and economic conditions of the society.

**Public 3**

**Thiru. Jindha, Secretary, People's Consumer Projection Forum, Nazareth.**

He questioned whether their running plants are receiving water supply from TWAD Board (or) Are they tapping ground water. How will they manage their water needs for the construction activity? Under what basis employment opportunity will be given to the local people. In the EIA it was stated that coal will be transported by road or railway? But presently no railway line was existing to the proposed site. How it is feasible to transport such a huge quantity to the project site? To what extent the dust effect will be there?.

It was replied by the proponent that ESP is designed to limit particulate matter emission of less than 50mg /m3. Moreover the coal will be blended with lime stone to avoid SO2 emission in the flue gas. Due to the installation of a tall chimney of 130 M height, there will not be any emission problem. It is proposed to purchase water only from private desalination plants.

**Public- 4**

**Thiru. Kompu Maharaja, Ottapidaram Periyakulam Irrigation formers Association, Saminatham**

He has stated that, all the surrounding are dry and rain fed only. So far no industries are in Ottapidaram Taluk. So he has welcomed the coming of this project to give employment opportunity to the local people. He stressed the proponent to give top priority to the local educated youths in employment.

**Public -5**

**Thiru. Chendurpandi, Eppothumvendran**

He is residing near by to the propend's existing bio mass based power plant. The area is of dry, receiving less than the average rain fall. Presently 2000 people are directly and indirectly benefited by cutting and supplying bio mass to the power plant. So the people are able to get employment by this way. He hope that such opportunity will be arised due to setting up of this plant and welcomed this project.

**Public- 6**

**Thiru. Ramajeyam, Private worker, Thoothukudi**

He said that people are facing power cuts and deprived of employment in most of the days. The setting up of such power plant will solve such problems and welcomed the project.

**Public 7**

**Thiru. Natarajan, Sankaraperi.**

He welcomed the coming up of this project because this will trigger social economic development.

**Public 8**

**Thiru. Sathya Lakhsmana, Consumer protection council, Thoothukudi**

He demanded employment opportunity to the local people and at the same time ensure the environment is protected.

**Public 9**

**Thiru. Bose, Swaminatham village**

He demanded employment opportunity to the local people and at the same time ensure the environment is protected.

**Public 10**

**Thiru. Kanagaraj, Puthiamputhr**

The lands purchased by the earlier people for setting up agricultural farms. And now they sold these lands for power plant. Those who have given lands are becoming job less nowadays. So give top priority to those who have given this 225 acres of land to this power project.

To this project proponent replied that employment opportunity will be given to local people based on educational qualification.

**Public 11**

**Thiru. Alangaraparadhar, President, Meenava Makkal Katchi,**

He stated that the project proponent should accept people demand for employment opportunity, adopt latest technology to control dust emission. The unit should not draw sea water and discharge any waste water into sea. People of Thoothukudi District will be suffered due to high temperature. Government should give top priority and allotting power supply to this District.

**Public 12**

**Thiru. Chinnadurai, District Panchayat Chairman, Thoothukudi**

He has requested to give top priority to local people in employment. The roads from Port are already damaged and experience heavy traffic, how coal will be conveyed from Port to the project site.

It was replied that maximum effort will be made to transport coal through railways. In the worst case the local village roads will be strengthened through government scheme (sharing unit's fund) and will be used.

**District Revenue Officer, Thoothukudi District.**

Atlast, the District Revenue Officer thanked the public for registering their suggestions / opinion about the proposed project and declared the Public Hearing as concluded.

DEE, TNPC BOARD,
THOOTHUKUDI.

DISTRICT COLLECTOR (INCHARGE)/
DISTRICPT REVENUE OFFICER,
(Representative of District Collector),
THOOTHUKUDI DISTRICT.